**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 10.06.2025**

**அசல் வழக்கு எண். 188/2018**

**<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாதிகள் பொதுபாதையை பயன்படுத்தி வருவதை 1 முதல் 3 பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என அவர்களுக்கு எதிராக அந்த பொதுபாதை குறித்து விளம்புகை பரிகாரமும், நிரந்தர ஏவுகட்டளை பரிகாரமும் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிராது தபசில் சொத்துக்கள் குறித்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் 1ம் தபசில் 1வது அயிட்ட சொத்து ஒரு பொதுநடைபாதை. அந்த பொதுபாதை சர்வே எண்.353 ல் தென்கடைசியில் தென்வடல் 15 அடி, கிழமேல் 350 அடி விஸ்தீரணம் உடையது. 1ம் தபசில் 2வது அயிட்ட சொத்து சர்வே எண்.353 ல் தென்கடைசியில் தென்வடல் 15 அடி, கிழமேல் 32 அடி விஸ்தீரணம் உடையது. 1ம் தபசில் 2வது அயிட்ட சொத்து 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தின் ஒரு பகுதி. எனக்கு பாத்தியப்பட்ட 2ம் தபசில் சொத்தானது சர்வே எண்.353 /3 மற்றும் 35 சென்ட் விஸ்தீரணம் கொண்டது. 2ம் வாதிக்கு பாத்தியப்பட்ட 3ம் தபசில் சொத்தானது சர்வே எண்.353/8 மற்றும் 25 சென்ட் விஸ்தீரணம் கொண்டது.

2. மேற்படி சொத்துக்களில் நான் கிரையம் பெற்றது 2ம் தபசில் சொத்து. 2ம் தபசில் சொத்தை 1984ம் வருடம் 2 அயிட்டங்களாக கிரையம் பெற்றேன். 2ம் தபசில் சொத்தை 2 ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.2 ஆவணம் மேற்கூறிய 2 கிரைய ஆவணங்களில் 2வதாக பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மால்களில் வண்டிப்பாதை குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வண்டிப்பாதை குறித்து முதலாவது பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் கிரையம் பெற்றபோது

1984ம் வருடத்தில் தபசில் சொத்து மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்டு விற்கப்பட்டபோது அந்த இடத்தில் வண்டிப்பாதை குறித்து ஏதேனும் அரசு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. 2ம் தபசில் சொத்தை 2 ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்றதற்கு காரணம் ஏதேனும் உண்டா என்றால் முதலில் அன்னத்தாய் என்பவர் 15 செண்ட் இடம் மட்டுமே அளிப்பதாக கூறினார். பின்பு அவரது மகளின் திருமணத்திற்கு வேண்டி மீதி இடத்தையும் கிரையம் செய்து கொடுத்தார். நான் கிரையம் பெற்ற பிறகு 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்து ஒரு வண்டிப்பாதை என்றோ, பொதுப்பாதை என்றோ அரசு ஆவணங்கள் எதிலும் குறிப்பிடப்பட்டு அதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை.

3. 2ம் தபசில் சொத்து எனக்கு முன்பு அன்னத்தாய் என்பவருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி அன்னத்தாய் என்பவருக்கு 2ம் தபசில் சொத்து பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அன்னத்தாய்க்கு 2ம் தபசில் சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது. மேற்படி அன்னத்தாய் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 ஆண் பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகள். மேற்படி அன்னத்தாயின் அத்தனை வாரிசுகளையும் இந்த வழக்கில் கட்சி சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**